# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 23.12.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

உலகில் வரும் மனிதன் ஒரு நாள் அதை விட்டு விட்டு பிரிய வேண்டியது வரும். இது இயற்கைச் சட்டமாகும். இதிலிருந்து எவரும் தப்பி ஓட முடியாது. திருக்குர்ஆனிலும் இதுபற்றி பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

*குல்லு நஃப்ஸின் ஸாயிக(த்)துல் மவ்த் - ஒவ்வொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும்.(3:186)*

மேலும் பல கோணங்களில் இது தொடர்பாக கவனமூட்டப்பட்டுள்ளது. மனிதனுக்கு தனது மரணத்தை எப்போதும் தனது கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். பிறகு இதன் மூலமே அவனுக்கு இறைவன் பக்கம் கவனம் ஏற்படுகிறது. அல்லாஹ், தான் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் இந்த பூமியில் இருக்கின்ற மற்ற அனைத்து பொருள்களும் பிரபஞ்சங்களில் இருக்கின்ற அனைத்து பொருள்களும் அழிந்து விடும் என்றே கூறியிருக்கின்றான்.

இறைவனது இருப்பு மட்டும்தான் எஞ்சியிருக்கும் என்பதால் அல்லாஹ் ஒரு மூஃமினுக்கு இவ்வுலக வாழ்க்கையை விட அதிகமாக மறுவுலக வாழ்க்கை பற்றி கவனமூட்டியுள்ளான். அது உண்மையானதும் நீளமான வாழ்க்கையுமாகும். அதில் அடியான் அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்பட்டதன் காரணமாக அவனது அருட்கொடைகளுக்கு வாரிசாகி விடுகின்றான். அவ்வாறு செயல்படவில்லை என்றால் கீழ்படியாமல் இருந்ததன் காரணமாக அவனுக்கு தண்டனை கிடைக்கலாம்.

நம்மில் எவர் இவ்வுலகை விட மறுவுலகிற்கு முன்னுரிமை வழங்குவாரோ அவர் நற்பாக்கியம் பெற்றவராவார். அவர்கள் இறைவனது திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அந்த உண்மையான அன்பிற்குரியவனை திருப்திப்படுத்துவதில் தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை அவர்கள் கழிக்கின்றனர். அவர்களின் அன்புக்குரியவன் திருப்தி அடைய வேண்டும் என்பதற்காக முயற்சி செய்தவாறு அவர்கள் வாழ்க்கையைக் கழிக்கின்றனர். அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் தருகின்றார்கள். இதற்காக எல்லா விதமான தியாகத்திற்கும் அவர்கள் தயாராக இருக்கின்றனர். இதில் எந்த அளவு அவர்கள் முன்னேறிச் செல்கின்றனர் என்றால், மார்க்கத்திற்காக தொண்டாற்றுவதைத் தவிர அவர்களுக்கு வேறு எதிலும் ஆர்வம் இருப்பதில்லை. மற்றவர்களது உரிமைகளை அவர்கள் செலுத்துவார்கள். ஏனென்றால், இறைவனது அடியார்களுக்குரிய உரிமையைச் செலுத்துவது இறைவனது கட்டளையாகும். இதுவும் மார்க்கமாக இருக்கின்றது. தங்களது உடன்படிக்கைகளை இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அவர்கள் நிறைவேற்றுகின்றனர். அதை நிறைவேற்றுவதற்காக அவர்களது வழியில் வருகின்ற எந்த தடையையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்களுக்கு முன்னால் துன்பத்திலும், இன்பத்திலும், வறுமையிலும், செழிப்பிலும், நோய்வாய்ப்பட்டிருக்கும் நிலையிலும், ஆரோக்கியமான நிலையிலும் ஒரேயொரு நோக்கம் மட்டும்தான் இருக்கும். எனது இறைவனுடன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுபவனாக நான் இருக்க வேண்டும் என்பதுதான் அந்த நோக்கமாகும். என்னிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள அமானத்துகளுக்குரிய உரிமையைச் செலுத்தக் கூடியவனாக நான் இருக்க வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர்.

எவர்கள் தொடர்பாக அல்லாஹ், *மக்களில் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக தங்களது உயிரை விற்று விடுகின்ற சிலரும் உள்ளனர் (2:208)* என்று கூறுகின்றானோ அந்த மக்களாக இவர்கள் இருக்கின்றார்கள். அவர்களது முகங்களில் எல்லா சமயங்களிலும் ஒரு நிம்மதி தென்படுகின்றது. அவர்கள் நிம்மதி அடைந்த ஆன்மாவின் வடிவமாகத் திகழ்கின்றார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன் இத்தகைய சிறப்புகளின் எஜமானராக இருந்த ஒரு பெரியவரின் வஃபாத் நிகழ்ந்துள்ளது. நிச்சயமாக அவர் ஜமாஅத்தின மகத்தான சொத்தாக இருந்தார். அவர்களது பெயர் மதிப்பிற்குரிய ஸெய்யது அப்துல் ஹை ஷா சாஹிப் ஆகும். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அல்லாஹ் அவருக்கு, தனது அன்பர்களுக்கு வழங்கியுள்ள நெருக்கத்தின் இடத்தை வழங்குவானாக! ஜமாஅத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த இழப்பை முழுக்க முழுக்க தனது அருளால் ஈடு செய்வானாக! அவர்களது இடத்தில் வருகின்ற எண்ணற்ற சிறந்த நபர்களை அவன் உருவாக்குவானாக! அதன் மூலமாக அஹ்மதிய்யத்தின் இந்தப் படை தனது இலக்கை நோக்கி மிக விரைவாக முன்னேறிக் கொண்டே செல்லட்டும்.

இப்போது நான் மதிப்பிற்குரிய ஸெய்யது அப்துல் ஹை ஷா சாஹிப் தொடர்பான சில விபரங்களைக் கூறுகின்றேன்.

மதிப்பிற்குரிய ஷா சாஹிப் அவர்கள் 1932 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ம் தேதி காஷ்மீரிலுள்ள அணந்நாக் மாவட்டத்திலுள்ள குரேல் என்ற இடத்தில் பிறந்தார்கள். பிறகு அவர்கள் பெரியவர் ஆன பிறகு அங்கிருந்து காதியான் வந்தார்கள். காதியான் வந்த பிறகு இந்தியா பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்ட சமயத்தில் அவர்கள் பாகிஸ்தான் வந்து விட்டார்கள். இவர்களது தாயார் காஷ்மீரிலேயே இருந்து வந்தார்கள். அவர்களை விட்டு இவர்கள் பிரிந்து விட்டார்கள். பிறகு 40 வருடங்கள் கழிந்த பிறகுதான் அவர்களது தாயாரை அவர் சந்திக்க முடிந்தது. 40 வருடங்கள் வரை தனது தாயாரை சந்திக்க முடியவில்லை. இந்தப் பிரிவை மார்க்கத்திற்காக அவர் சகித்துக் கொண்டார்.

இவர்களைப் பற்றிய சுருக்கமான வரலாற்றைக் கூறுகின்றேன். இவர்களது பாட்டனாரான ஸெய்யது முஹம்மது ஹுஸைன் ஷா சாஹிப் ஸ்ரீ நகரிலுள்ள முஹல்லா கான்யாரைச் சார்ந்த ஸெய்யது குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். இந்தக் குடும்பத்தைச் சார்ந்த நபர்கள் மார்க்கக் கருத்து வேறுபாடுகள் காரணமாக தங்களது மூதாதையார்கள் வாழ்ந்த பகுதியை விட்டு விட்டு நாடுவால் என்ற பகுதியில் குடிபெயர்ந்தார்கள். இவர்களது ஒரு மகன் ஸெய்யது அப்துல் மன்னான் ஷா சாஹிப் ஆவார்கள். இவர் இளைஞராக இருந்த சமயத்தில் பைஅத் செய்து அஹ்மதியானார். சிறு வயதிலேயே இவர் அஹ்மதிய்யத்தை தழுவினார். பீர் – முரீது விஷயங்களை இவர் அஹ்மதிய்யத்திற்காக தியாகம் செய்தார். மிகுந்த பணிவுடனும் தாழ்மையுடனும் இவர் தனது வாழ்நாளைக் கழித்து வந்தார். ஜம்மு காஷ்மீரின் அஹ்மதிய்ய வரலாற்றில் மதிப்பிற்குரிய அப்துல் ஹை ஷா சாஹிப் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

மதிப்பிற்குரிய ஸெய்யது அப்துல் ஹை ஷா ஸாஹித் சாஹிப் 1941 ஆம் ஆண்டு காதியான் வந்தார்கள். 1945 ஆம் ஆண்டு இஸ்லாத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவாறு மத்ரஸா அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது 1949 ஆம் ஆண்டு ஜங் மாவட்டத்திலுள்ள அஹ்மது நகரில் மீண்டும் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். 1953 ஆம் ஆண்டில் மவ்லவி பாஸில் படித்து, அதில் தேர்ச்சி பெற்றார்கள். அந்தப் படிப்பில் அவர்கள் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் முதலிடம் வகித்தார்கள். 1955 ஆம் ஆண்டு ஜாமிஅத்துல் முபஸ்ஸிரினில் இருந்து ஸாஹிது பட்டம் பெற்று தேர்ச்சி பெற்றார்கள். பிறகு அரபியில் எம்.ஏ. படித்து தனிச்சிறப்புடன் அதில் தேர்ச்சி பெற்றார்கள். பிறகு ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் ஒரு நீண்ட காலம் தொண்டு செய்வதற்கான வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. மூன்று வருடங்கள் வரை அன்ஸாருல்லாஹ் மாத இதழ் மற்றும் ஜாமிஆவின் பத்திரிகை ஆசிரியராகவும் இவர்கள் இருந்தார்கள். ஏறக்குறைய 12 அல்லது 13 ஆண்டுகள் வரை ‘காலித்’ மற்றும் ‘தஸ்ஹீருல் அஸான்’ ஆகிய மாத இதழ்களின் பிரிண்டர் ஆகவும் இருந்து வந்தார்கள். ஸியாவுல் இஸ்லாம் பிரஸ்ஸின் மேனேஜராகவும், பிரிண்டராகவும் இருந்தார். அஸ்ஸிர்க்கத்துல் இஸ்லாமியாவில் மேனேஜிங் டைரக்டராகவும் அவர்கள் இருந்தார்கள். அல்ஃபஸ்ல் பத்திரிகையின் தலைவராகவும் இருந்தார்கள். M.T.A. பாகிஸ்தானின் முதலாவது மேனேஜிங் டைரக்டராகவும் அவர்கள் இருந்தார்கள். ஃபஸ்லே உமர் பவுண்டேஷனின் டைரக்டராகவும், தாஹிர் பவுண்டேஷன் டைரக்டராகவும் இருந்தார்கள். வெளியீட்டுத்

துறையின் நாஸிர் ஆகவும் அவர்கள் இருந்தார்கள். இன்னும் எண்ணற்ற கமிட்டிகளின் உறுப்பினராகவும் இவர்கள் இருந்து வந்தார்கள். தற்காலிக நாஸிர் அஃலா மற்றும் தற்காலிக உள்ளூர் அமீர் ஆகவும் தொண்டாற்றும் வாய்ப்பும் இவருக்கு கிடைத்துள்ளது. காஷ்மீர் மொழியில் குர்ஆன் மொழியாக்கத்தை இரண்டாவதாக சரிபார்க்கின்ற நல்வாய்ப்பும் இவருக்கு கிடைத்தது. நாஸிர் இஷாஅத் என்ற தமது பணியில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களின் தொகுப்பான ரூஹானி கஸாயினை எழுத்து வடிவில் கொண்டு வந்து அதன் புதிய Computerised Edition –ஐ தயார் செய்வதை அவர்கள் கண்காணித்து வந்தார்கள். பல்வேறு நூல்களுக்கான Index –ஐ இவர்கள் உருவாக்கியுள்ளார்கள். அவற்றிற்கு முகவுரை மற்றும் அணிந்துரை எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹின் தர்ஜுமத்துல் குர்ஆன் தொடர்பான பணிகளில் பல்வேறு வகையில் இவர்கள் தொண்டு புரிந்துள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் சொற்பொழிவுகள் அடங்கிய ஹோமியோபதிக் என்ற நூலைத் தயார் செய்வதிலும் அவர்கள் பெரும் பங்கு வகித்துள்ளார்கள். மிக நல்ல ஆலோசனையை வழங்கக் கூடியவராகவும், எளிய இயல்பைக் கொண்டவர்களாகவும், தூய இயல்பை உடையவராகவும், பிரச்சனைகளை நன்றாகப் புரிந்து கொள்பவராகவும், மென்மையாக நடந்து கொள்பவர்களாகவும், சிறந்த திட்டங்களைத் தீட்டுபவர்களாகவும், குறைவாகப் பேசுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். சிறந்த உறுதிமிக்க அறிவுத்திறன் கொண்டவர்களாக அவர்கள் இருந்ததால் ஒவ்வொரு விஷயத்தையும் மிக ஆழமாக அவர்கள் ஆராய்ந்து வந்தார்கள். அது தொடர்பான தனது உறுதிமிக்க கருத்தையும் தெரிவித்து வந்தார்கள்.

ஜமாஅத்தின் கலீஃபாக்களிடமிருந்து கிடைக்கின்ற அறிவார்ந்த விஷயங்களை ஆராய்ந்து அது தொடர்பான மேற்கோள்களை நிறைவு செய்கின்ற பணியை விரைவாக செய்து முடித்து விடுவார்கள். நூல்களைத் தயார் செய்வது முதல் அச்சிட்டு வெளியிடுவது வரை அனைத்துப் பணிகளிலும் தனது குழுவினருக்கு அவர்கள் வழிகாட்டி வந்தார்கள். அது தொடர்பான ஆழமான ஆலோசனைகளையும் வழங்கி வந்தார்கள்.

நாஸிர் இஷாஅத் ஆக இருப்பவர்களுக்கு பிரிண்டிங்கிலும் அனுபவம் இருக்க வேண்டும். இவர்கள் அல்ஃபஸ்ல் பத்திரிகையின் பிரிண்டர் ஆகவும், வெளியீட்டாளராகவும் இருந்தார்கள். மற்ற பத்திரிகைகளிலும் இவர்கள் இந்தப் பணியைச் செய்து வந்துள்ளார்கள். அச்சிடப்பட்ட தாள்களை பரிசோதித்துப் பார்ப்பதில் இவருக்கு பெரும் திறமை இருந்தது. பிரஸ் மற்றும் மெஷினரியின் ஒவ்வொரு பொருள், அதன் வகைகள், தொடர்பான அறிவு, Technical அறிவு ஆகியவை முழுமையாக அவர்களுக்கு இருந்தது. இவ்வாறே நூல் வெளியீடு அல்லது பத்திரிகைகளை அச்சிடுவது போன்ற ஒவ்வொரு விஷயத்திலும் குறிப்பாக சில விஷயங்களைச் சுட்டிக் காட்டுவதுடன் மிகச் சிறந்த உறுதியான வழிகாட்டலை அன்னார் வழங்கினார்கள்.

**பிறகு அப்துல் ஹை ஷா சாஹிப் தொடர்பாக அல்ஃபஸ்லில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.**

1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இவர்கள் தமது வாழ்க்கையை அர்ப்பணிக்க முடிவு எடுத்தார்கள். ஆனால், வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்காக உறுதிமொழி கூறுகின்ற படிவத்தை இவர்கள் 1950 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதி பூர்த்தி செய்தார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று நடுநிலைப்பள்ளி படிப்பை இவர்கள் முடித்தார்கள். பிறகு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். ஜாமிஆவில் படித்துக் கொண்டிருக்கும்போதே மெட்ரிக் படித்து பல்கலைக்கழகத்தில் ஆறாவது இடத்தைப் பெற்று அதில் தேர்ச்சி பெற்றார்கள். ஜாமிஆவிலும் எல்லா வருடமும் அல்லாஹ்வின் அருளால் அவர்கள் முதலாவது இடத்தைப் பெற்று வந்தார்கள்.

இவ்வாறே மவ்லவி ஃபாஸிலுக்கான தேர்வில் மாநிலத்திலேயே முதல் இடத்தைப் பெற்றார்கள்.

1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இவர்கள் முதலில் பொறுப்பில் அமர்த்தப்பட்டார்கள். பல்வேறு துறைகளில் இவர்கள் தொண்டாற்றினார்கள். 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் தேதி ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், இவர்களை நாஸிர் இஷாஅத் ஆக நியமித்தார்கள். ஹஸ்ரத்

நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் அறிவுச் செல்வம் நிரம்பியிருக்கும் தர்ஸுல் குர்ஆனுக்குத் தேவையான ஆதாரங்களைத் திரட்டுவதில் அன்னாருக்கு உதவிபுரியும் நற்பேறு பெற்றார்கள். ஒவ்வொரு நாளும் தனது குழுவுடன் இரவு மூன்று மணி வரை அமர்ந்து அவர்கள் இந்தப் பணியை முழுமையாகச் செய்து வந்தார்கள். எல்லா விஷயங்களையும் சரிசெய்து அதனை இலண்டனுக்கு பேக்ஸ் மூலம் அனுப்பாத வரை அவர்கள் ஓய்வெடுத்ததில்லை. குத்பா பேருரைகளுக்காகவும் கூட அறிவார்ந்த விஷயங்களைக் கூறுவதில் உதவிபுரிந்துள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் குர்ஆன் மொழியாக்கம் மற்றும் அவர்களது நூலான ஹோமியோபதிக் ஆகியவற்றிற்கு தேவையான விஷயங்களை ஒன்றுதிரட்டும் கமிட்டியின் உறுப்பினராக அவர்கள் இருந்தார்கள். இது தொடர்பாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணிகளை மிகச் சிறந்த முறையில் அவர்கள் நிறைவேற்றினார்கள். திருக்குர்ஆன் மொழியாக்கங்களை வெளியிடுவது என்ற திட்டத்தின் கீழ் பஞ்சாபி, சிந்தி, பஸ்து, சராயி ஆகிய மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கங்களை நிறைவு செய்து அதனை வெளியிடும் நல்வாய்ப்பும் அவர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அன்னாரைப் பாராட்டியவாறு ஒருமுறை இவ்வாறு கூறினார்கள். 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி நிகழ்த்திய குத்பா பேருரையில் **ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.**

ஸெய்யது அப்துல் சாஹிப் அவர்களிடம் நான் இந்த சிறப்பான விஷயத்தைக் காண்கின்றேன். எப்போதெல்லாம் இவருக்கு ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி நாம் புரிய வைக்கும்போது, அது தொடர்பாக சுயமாக அவருக்கு எவ்வித அறிவும் இல்லாமல் இருந்தால் அது தொடர்பாக சுயமான அறிவு உடையவர்களை அவர்கள் தேடுவார்கள். நான் ஒரு நூல் தொடர்பாக என்ன வழிகாட்டலை அவருக்கு வழங்கியிருந்தேனோ அதற்கேற்ப நான் கூறிய விதமாக அதே நூலை தயார் செய்யாமல் அவர் ஒருபோதும் இருந்ததில்லை. அல்லாஹ்வின் அருளால் மிக ஆழமான தொலைநோக்கு பார்வையை அவர் பெற்றிருந்தார். மேலும் மிக நுட்பமான பார்வையுடன் அவர்கள் ஒவ்வொரு பொருளையும் ஆராய்ந்து படித்து வந்தார்கள்.

பிறகு 2008 ஆம் ஆண்டில் நான் இவர்களிடம் ரூஹானி கஸாயினின் Computerised வெளியீடு தொடர்பாக அதன் பிரிண்டிங் நடைபெற வேண்டும் என்று கூறிய போது அந்தப் பணியை மிகுதியான உழைப்புடன் இவர்கள் செய்து வந்தார்கள். இந்த Set ன் புதிய Computerised Set வெளிவந்த போது அதில் பல சிறப்பம்சங்கள் இருந்தன. அதை தவிர்த்து ஸெய்யது அப்துல் ஹை ஷா சாஹிப் அவர்கள் இந்த புதிய பதிப்பில் உள்ள பக்கங்கள் ஏற்கனவே வெளிவந்த பழைய பதிப்புகளிலுள்ள பக்கங்களுக்கு முற்றிலும் ஒத்த நிலையில் இருக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு செயல்பட்டார்கள். அதன் மூலமாக ஜமாஅத் நூல்களில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக இடம்பெற்றுள்ள மேற்கோள்களைத் தேடுவதற்கு அது வசதியாக வழியமைத்து தரும். இதைத் தவிர ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில கட்டுரைகள், அரபி கவிதைகள் போன்றவை ஏதோ காரணத்தால் முதலில் வெளியிடப்படாமல் இருந்தன. அவையும் இந்த தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களது உருது மொழியில் வெளியான திருக்குர்ஆன் மொழியாக்கத்தின் துவக்கத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நன்றியை வெளிப்படுத்துதல் என்ற தலைப்பின் கீழ் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

இப்போது உங்கள் முன் நாம் வைத்துள்ள இந்த திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு பணியில் இதை தயார் செய்வதில் என்னுடன் இலண்டனில் ஆலிம்களில் ஒரு குழு தொடர்ந்து வேலை செய்து வந்துள்ளது. இவ்வாறே ஜமாஅத்தின் தலைமையகமான ரப்வாவில் ஆலிம்களின் ஒரு குழு ஸெய்யது அப்துல் ஹை ஷா சாஹிப் அவர்களின் தலைமையில் இரண்டாவதாக அந்த மொழியாக்கத்தை சரிசெய்யும் பணியைச் செய்து தமது விலைமதிப்புள்ள ஆலோசனைகள் மூலமும் கருத்துக்கள் மூலமும் எனக்கு உதவி செய்துள்ளனர். ஒட்டுமொத்தமாக இவர்கள் எல்லாரது உதவியும் எனக்கு கிடைக்காமல் இருந்திருந்தால் நான் தனியாக இந்தப் பணியைச் செய்வது சாத்தியமற்றதாகும்.

1997 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள், ஸெய்யது அப்துல் ஹை ஷா சாஹிப் அவர்களுக்கு எழுதிய தமது கடிதத்தில் இவ்வாறு கூறியிருந்தார்கள். பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் மஹ்ஸர் நாமா என்ற பெயரில் புத்தகமாக வெளி வந்தது.

**இது தொடர்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் கூறினார்கள்.**

மஹ்ஸர் நாமா மிகவும் நல்ல முறையில் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. மாஷா அல்லாஹ் நீங்கள் மிகுதியாக உழைத்து திறமையுடன் இந்தப் பணியை செய்துள்ளீர்கள்.

பிறகு இன்னொரு கடிதத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஷா சாஹிபிற்கு இவ்வாறு எழுதியிருந்தார்கள்.

நீங்கள் அனுப்பிய ரிப்போர்ட் இந்த தேதியில் கிடைத்தது. மாஷா அல்லாஹ் மிகவும் நிறைவாக நீங்கள் பணியாற்றியுள்ளீர்கள். மிகவும் Productive ஆக நீங்கள் உள்ளீர்கள். இறைவன் அருளால், ஒப்படைக்கப்பட்ட பணிகளுக்காக மீண்டும் புதிய நினைவூட்டல் தேவைப்படாத ஒரே நாஸிர் ஆக தாங்கள்தான் உள்ளீர்கள். ஜஸாகுமுல்லாஹு அஹ்ஸனல் ஜஸா அல்லாஹும்ம ஸித் வ பாரிக்.

இந்த எல்லாப் புகழுரைகளும் அவர்களிடம் மேலும் பணிவை உருவாக்கியது. உழைப்பதன் பக்கம் அவர்களுக்கு மேலும் கவனம் ஏற்பட்டது. புகழுரைகளைக் கேட்ட பிறகு பணியில் குறைவு ஏற்படுகின்ற நிலை இருந்ததில்லை.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் பாகிஸ்தானில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய மல்ஃபூஸாத் 10 பாகங்களைக் கொண்டதாக இருந்தது. பின்னர் அது 5 பாகங்களாக மாற்றப்பட்டது. இந்த பாகங்களில் இருந்த எல்லா திருக்குர்ஆன் வசனங்களின் மேற்கோள்களும் இதில் எழுதப்பட்டது. தேவைக்கேற்ப புதிய தலைப்புகளும் அதில் இடம்பெற்றது. படிப்பவர்களின் வசதிக்காக ஒவ்வொரு பாகத்தின் இறுதியிலும் தலைப்புகள், திருக்குர்ஆன் வசனங்கள், பெயர்கள், இடங்கள் ஆகியவற்றின் Index புதிதாக தொகுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த வருடம் ஷா சாஹிப் அவர்கள் ஜல்ஸாவில் இங்கு வந்த சமயத்தில் நான் அவர்களிடம் 5 பாகங்களுக்குப் பதிலாக இதனை மீண்டும் 10 பாகங்களில் மாற்றி விடுங்கள் என்று கூறினேன். இவ்வாறே பிரிண்ட் ஆனால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று நான் கூறியதைக் கேட்டு அவர்கள் சிறிதளவு கூட இதுபற்றி எதுவும் கூறவில்லை. இவ்வளவு உழைத்து இதனை நாங்கள் 5 பாகங்களில் சுருக்கிக் கொண்டு வந்துள்ளோம். அதற்கான Index ஐயும் தயார் செய்து விட்டோம். மீண்டும் இதற்கான Index தயார் செய்வதில் சிரமம் இருக்கின்றது என்றெல்லாம் கூறாமல் அதுபற்றி சிறிதளவு கூட எதையும் வெளிப்படுத்திக் கூறாமல் உடனடியாக நல்லது. நாங்கள் மீண்டும் அதை 10 பாகங்களில் வெளியிட ஆரம்பித்து விடுகின்றோம் என்று கூறினார்கள்.

சிறிய Volume ஆக இருந்தால் படிப்பதில் எளிதான நிலை இருக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளைகள் இந்த நூல்களில் உள்ளன. மனிதன் பயணத்தில் இருக்கும்போதும் நடக்கும்போதும் படுக்கும்போதும் எந்த சமயத்திலும் இதை படிக்க முடியும். இந்த வகையில் எனது கருத்தின்படி சிறிய பாகமாக வெளியிடுவதன் மூலம் அதிக பயன் இருக்கும். பெரிய பாகத்தை விட சிறிய பாகம் படிப்பதற்கும் எளிதாக இருக்கும். எவ்வாறிருப்பினும், நான் இதைக் கூறியவுடன் அவர்கள் இந்தப் பணியைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

அறிவாலும் இறை ஞானத்தாலும் நிரம்பியுள்ள ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் விலைமதிப்புள்ள பொக்கிஷமான தஃப்ஸீரே கபீரின் 10 பாகங்கள் ஒரு செட் ஆக வெளியிடப்பட்டுள்ளது. அவர்கள் இதனை படிப்பவர்களின் வசதிக்காக ஒரு மிகப்பெரிய Comprehensive வகையான Index ஐ உருவாக்கி இருந்தார்கள். அதில் பெயர்கள், புவியியல் தொடர்புடைய இடங்கள், அகராதிப்

பொருள்கள் ஆகியவற்றின் முழுமையான Index இருக்கின்றது. அவர்கள் அஞ்சுமனின் பல்வேறு கமிட்டிகளின் உறுப்பினராக இருந்துள்ளார்கள்.

முஸாவராத்தி பேனல், தஹ்ரீகே அஹ்மதிய்யத் துறை, மஜ்லிஸே இப்தா, கிலாஃபத் லைப்ரரி கமிட்டி, மன்ஸூபா பந்தி கமிட்டி, ஆடியோ–வீடியோ கேசட்டுகளைப் பாதுகாக்கும் கமிட்டி, தபர்ருகாத் அதாவது புதைப் பொருள்களைப் பாதுகாக்கும் கமிட்டி, கிலாஃபத் ஜுப்ளி கமிட்டி ஆகியவற்றின் மெம்பராகவும் அவர்கள் இருந்தார்கள்.

இவ்வாறே இறைவழியில் கைதியாக இருக்கும் கண்ணியமும் அவர்களுக்கு கிடைத்தது. அல் ஃபஸ்ல் பத்திரிகை போர்டின் தலைவராகவும் அவர்கள் இருந்து வந்தார்கள்.

அப்துல் ஹை ஷா சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை முதன்முறையாக சந்தித்ததைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹுஸூரின் திகில் நிறைந்த தோற்றம் மற்றும் அவர்களது பரிவு தொடர்பாக இந்த விஷயமும் எனது நினைவில் வருகின்றது. ஹுஸூர் அவர்கள் ஜமாஅத்தின் சில முக்கிய பணிகளை என்னிடம் ஒப்படைத்தார்கள். முதல் சந்திப்பின்போது ஹுஸூர் என்னைப் பற்றி கேட்டதும் நான் ஹுஸூர் முன்னால் சென்றேன். எனது கைகள் அப்போது நடுங்க ஆரம்பித்தன. ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் நீங்கள் நெர்வஸ் ஆவதற்கு இதில் என்ன இருக்கிறது? பணியை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். அதை முழுமையான உழைப்புடன் செய்யுங்கள். பிறகு ஹுஸூர் எனது கைகளை தமது கைகளால் எடுத்துக் கொண்டார்கள். அதன் விளைவாக எனது அந்த நிலை மாறிவிட்டது. ஹுஸூர் அவர்கள் எவர் மீதும் நம்பிக்கை வைப்பதில் அவசரப்படமாட்டார்கள். பிறகு நம்பிக்கை வைத்து விட்டால் பிறகு அவருக்கு தனது நிறைவான அன்பையும், பரிவையும் காட்டுவார்கள். வழிகாட்டல்களை வழங்குவார்கள். அவருடன் கண்டும் காணாதது போல் நடந்து கொள்ளுதல், மன்னிக்கும் தன்மையுடன் நடந்து கொள்ளுதல் ஆகியவற்றை கடைபிடிப்பார்கள். தொடர்ந்து இவ்வாறு அவருடன் நடந்து கொள்வார்கள்.

**ஷா சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஒரு வழக்கில் என்னை கைது செய்வதற்கான வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. பாகிஸ்தானில் பத்திரிகைகள் ஆசிரியர்கள், பிரிண்டர்ஸ் ஆகியவர்கள் மீது பல்வேறு வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவரையும் கைது செய்வதற்கான வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்ததும் ஹுஸூர் ஷா சாஹிபை அழைத்தார்கள். அதன் பிறகு ஷா சாஹிப் எழுதுகின்றார்கள்:

நாங்கள் திரும்பி வந்ததும் ஹுஸூர் அவர்கள் தமது ஒரு மகனை எங்களிடம் அனுப்பி வைத்தார்கள். அப்துல் ஹை இடம் நீங்கள் பயப்பட வேண்டாம். நான் உங்களுக்காக துஆ செய்வேன் என்று கூறி தனது மகனை அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் என்னை அழைத்து இவ்வாறு கூறினார்கள். பாருங்கள்! இங்கிருந்து ஷா சாஹிபும் மற்றவர்களும் சென்று விட்டார்கள். இப்போது வழக்கு நடைபெற இருக்கின்றது. அவர்கள் லாஹூருக்கோ அல்லது இஸ்லாமாபாத்திற்கோ போக வேண்டியதுள்ளது. இப்போது அவர்கள் போயிருக்க மாட்டார்கள். நீங்கள் அவர்களிடம் சென்று கூறுங்கள். அவர்கள் இங்கிருந்து சென்றவுடன் மிகுந்த கவலையுடன் நான் துஆ செய்த போது அல்லாஹ் எனது நாவில் இந்த சொற்களை வரும்படி செய்தான். அவன் தனது நல்லடியார்களை ஒருபோதும் வீணாக்கமாட்டான். எனவே, கவலைப்பட வேண்டிய தேவை இல்லை. மிகவும் அபாயகரமான சிக்கலான கேஸ்களிலிருந்தும் இவர் விடுபட்டார். எல்லா பிரச்சனைகளும் முடிவுக்கு வந்தன. அல்லாஹ் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் இவ்வாறு கூறியது இந்த விஷயத்திற்கு சான்றாக இருக்கின்றது. அல்லாஹ்வின் பார்வையில் மதிப்பிற்குரிய

ஷா சாஹிப் அவர்கள் நல்லடியார்களில் ஒருவராகத் திகழ்கின்றார். இப்படிப்பட்டவர்கள் அல்லாஹ்வின் அடைக்கலத்தின்கீழ் இருக்கின்றார்கள்.

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் இவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. அப்போது இறைவழியில் கைதாகும் நற்பாக்கியமும் இவருக்கு கிடைத்தது.

**ஒரு முரப்பி சாஹிப் எழுதுகின்றார்:**

ஷா சாஹிப் அவர்கள் இதை கூறியுள்ளார்கள். ஆரம்ப நாட்களில் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கு மிகவும் குறைந்த அலோவன்ஸ் தான் இருந்து வந்தது. இதன் மூலம் வாழ்நாளைக் கழிப்பது மிகவும் சிரமமாக இருந்து வந்தது. ஷா சாஹிப் கூறுகின்றார்கள்:

எனது மாமனார் ஒருமுறை என்னிடம் இவ்வாறு கூறினார்கள். நீங்கள் உலக அளவிலும் மிக அதிகமாகப் படித்தவராக இருக்கின்றீர்கள். எனவே, நீங்கள் உலகத்தின் பக்கம் சென்று விடுங்கள். அவ்வாறு ஏன் செல்லாமல் இருக்கின்றீர்கள்? என்று கேட்டார்.

ஷா சாஹிப் கூறுகின்றார்கள்: நான் அவர்களிடம் கூறினேன். நான் இரண்டு உடன்படிக்கைகளைச் செய்துள்ளேன். ஒரு உடன்படிக்கை உங்களது மகளுடன் செய்துள்ள திருமண உடன்படிக்கையாகும். இரண்டாவது உடன்படிக்கையானது எனது வாழ்வை அர்ப்பணிப்பதாக இறைவனுடன் நான் செய்துள்ள உடன்படிக்கையாகும். இப்போது நீங்கள் கூறுங்கள். இதில் எந்த உடன்படிக்கையை நான் முறிக்க வேண்டும்? சிறிது நேரம் கழிந்த பிறகு நான் எனது மாமனாரிடம் கூறினேன்.

நான் முதலாவது உடன்படிக்கையில் நிலைபெற்றவாறு இரண்டாவது உடன்படிக்கையை முறிப்பது என்பது எப்படி நடக்க முடியும்? என்று கேட்டேன். இந்த விஷயத்தைக் கேட்ட பிறகு எனது மாமனார் அமைதியாக இருந்து விட்டார்கள். இந்த விஷயம் தொடர்பாக அதற்கு பிறகு எப்போதும் அவர்கள் பேசவில்லை.

**ஷா சாஹிப் கூறுகின்றார்கள்:**

இதற்குப் பிறகு இறைவனது அருளால் எனது முழு வாழ்நாளிலும் கணக்கின்றி அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான். பழைய சான்றோர்களிடம் இத்தகைய நல்ல இயல்பும் இருந்திருக்கின்றது. அவர்களது மாமனாருக்கு அப்போதைய நிலைமையில் மனித எதிர்பார்ப்பின் அடிப்படையில் இப்படிப்பட்ட எண்ணம் ஏற்பட்டது. ஆனால் ஷா சாஹிபின் பதிலைக் கேட்டு அவர்கள் முற்றிலும் அமைதியாக இருந்து விட்டார்கள். இறைவனோடு செய்த உடன்படிக்கையை முறிப்பது பற்றி ஒரு அஹ்மதி அதை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. இதிலிருந்தும் ஷா சாஹிபிற்கு இருந்த இறை நம்பிக்கை பற்றியும் நமக்கு தெரிய வருகிறது. அந்த தவக்குல் மற்றும் இறைவனுடன் செய்த உடன்படிக்கையைப் பேணியதன் காரணமாக இறைவன் அவர்களுக்கு எந்த அளவு வழங்கினான் என்றால் முழு வாழ்நாளும் எனக்கு எவ்வித வறுமையும் இருக்கவில்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

தனக்கு கீழ் உள்ளவர்களிடம் அவர்கள் நல்ல முறையில் பரிமாறுவார்கள். அவர்களது உணர்வுகளை மதித்து நடந்து வந்தார்கள். அவர்களது கணக்கர் கூறுகின்றார்.

நான் ஷா சாஹிபுடன் 15 வருடங்களாக பணியாற்றியுள்ளேன். ஒரேயொரு சம்பவத்தைத் தவிர வேறு எந்த சந்தர்ப்பத்திலும் அவர்கள் தமது கடுமையான கோபத்தை வெளிப்படுத்தியதை நான் பார்த்ததில்லை. நடந்த சம்பவம் என்னவென்றால் ஒரு விஷயத்தை தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவாக நாங்கள் எங்களது அலுவலகத்திலிருந்த சில நூல்களை ஷா சாஹிபிடம் தெரிவிக்காமலேயே பிறருக்கு கொடுத்து விட்டோம். ஒரு நண்பர் இது தொடர்பாக ஷா சாஹிப் அவர்களுக்கு தெரிவித்த போது ஷா சாஹிப் தமது கடுமையான கோபத்தை வெளிப்படுத்தினார்கள். ஷா சாஹிப் என் மீது வெறுப்படைந்த காரணத்தால் இரண்டு நாட்கள் வரை நான் அவர்கள் இருந்த அறைக்கு செல்லாமல் இருந்தேன். இரண்டு நாட்களுக்குப் பிறகு அவர்கள் என்னை தனது அறைக்கு வரும்படி அழைத்தார்கள். பிறகு என்னைப் பார்த்து புன்சிரிப்பு சிரித்தார்கள். தனக்கு முன்னால் இருந்த பிஸ்கட் போன்றவற்றை அவர்கள் எனக்கு தந்தார்கள்.

**அவர்களுக்கு உதவி புரிந்து வந்த பணியாளர் முஹம்மது இக்பால் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

இருபது வருடங்கள் இவர்களோடு நான் பணியாற்றியுள்ளேன். தனது மகன்களுடன் பரிமாறுவது போன்று எங்களுடன் அவர்கள் பரிமாறுவார்கள். பணியாளர்களுடன் எப்போதும் அன்புடனும் நேசத்துடனும் பரிமாறி வந்தார்கள். அவர்கள் மிக எளிமையான இயல்புடையவர்களாக இருந்தார்கள். ஏதாவதொரு பணியாளருக்கு அவர்கள் உதவி செய்தால் மற்றவர்களுக்கு அதுபற்றி தெரியாமல் இருக்கும்படி செய்வார்கள். இவ்வாறே தனது விருப்பத்திற்கேற்ப ஒருவரிடம் வேலை வாங்கினால் முறையாக அதற்குரிய உரிமையைச் செலுத்துவார்கள். இவ்வாறே ஏதாவதொரு பணியாளரின் பிள்ளையின் திருமணம் நடந்தால் தன்னால் முடிந்த வரை அவருக்கு உதவி செய்து வந்தார்கள். இதைத் தவிர எண்ணற்ற தேவை உடையவர்களுக்கும் அவர்கள் உதவி புரிந்து வந்தார்கள்.

அவர்களது விரிவான அறிவு தொடர்பாக அரபி டெஸ்கைச் சேர்ந்த அப்துல் மஜீது ஆமிர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

எப்போதிருந்து இந்த எளியவன் ரூஹானி கஸாயினுடைய மொழியாக்கப் பணியை ஆரம்பித்தேனோ அப்போதிருந்தே அவர்களுடன் எனக்கு தொடர்பு இருந்து வந்தது. எனக்கு மொழியாக்கத்தின் போது மிகவும் சிரமமாகத் தென்படும் இடங்களில் அதற்கான சரியான தீர்வு கிடைப்பதற்காக அவர்களது வழிகாட்டல் எனக்கு தேவைப்பட்டது. மதிப்பிற்குரிய ஷா சாஹிப் அவர்கள் மலர்ந்த முகத்துடன் மிகவும் ஆராய்ந்து கூறியவாறும், அறிவுப்பூர்வமான கருத்துக்களை கூறியவாறும் சரியான சமயத்தில் எனக்கு வழிகாட்டியுள்ளார்கள். எனது கேள்விகளுக்கு மிகுந்த ஆதாரப்பூர்வமான திருப்திகரமான கேள்வியின் எல்லா அம்சங்களையும் சூழ்ந்து நிற்கின்ற பதில்களை அவர்கள் கூறியிருந்தார்கள். அந்த பதில்கள் அவரது அன்பாலும் உயர்வான நல்லொழுக்கத்தின் இனிமையாலும் நிறைந்து காணப்படும். நான் ஏதாவதொரு கருத்தைக் கூறினால் மிகவும் மலர்ந்த முகத்துடன் அதை ஏற்றுக் கொள்வார்கள். அவர்களது அன்பின் இந்த தொடர் அவரது இறுதி மூச்சு இருந்த வரை நீடித்திருந்தது.

**முபஸ்ஸிர் ஆயாஸ் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஜாமிஆவில் வருடந்தோறும் அல்லது ஒவ்வொரு வருடமும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். அந்த சமயத்தில் பரிசுகளை வழங்குவதற்காக ஜமாஅத்திலுள்ள சான்றோர்களில் சிலரை சிறப்பு விருந்தினர்களாக நாங்கள் அழைத்திருந்தோம். ஒரு வருடம் எந்தப் பெரியவரை நாங்கள் அழைத்திருந்தோமோ அதாவது ஷா சாஹிப் தொடர்பாக அவரை அறிமுகப்படுத்தியவாறு ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பிரின்ஸிபல் சாஹிப் அவர்கள் கூறினார்கள். பணி செய்பவர்கள் பல வகையில் இருக்கின்றார்கள். சிலர் ஒரு கையில் பணி செய்தவாறு மற்றொரு கையைத் தட்டிக் கொண்டே இருப்பார்கள். அதாவது தமது பணிகளைப் பற்றி பெருமையாக பிறருக்கு தெரிவித்துக் கொண்டே இருப்பார்கள். நாங்கள் இந்தப் பணியைச் செய்தோம். அந்தப் பணியைச் செய்தோம் என்று கூறிக்கொண்டே இருப்பார்கள்.

சிலர் தமது இரண்டு கைகளைக் கொண்டும் கைதட்டிக் கொண்டே இருப்பார்கள். அதாவது அவர்கள் எந்தப் பணியையும் செய்யமாட்டார்கள். ஆனால் அதிகமாக கூச்சலிடுவார்கள். அதிகமாக விளம்பரம் செய்வார்கள்.

சிலர் தமது இரு கைகளாலும் வேலை செய்வர். அவர்களது பணியை எவராவது பார்க்கின்றார்களா? அதைப் பற்றி புகழ்ந்து பாராட்டுகின்றார்களா? என்பதைப் பற்றியெல்லாம் அவர்களுக்கு எந்த சிந்தனையும் இருப்பதில்லை.

இன்று அப்படிப்பட்ட ஜமாஅத்தின் ஊழியர் நமது விருந்தாளியாக இருக்கின்றார். அதாவது ஸெய்யது அப்துல் ஹை ஷா சாஹிப் ஆவார்.

இது நூறு சதவீதம் உண்மையான விஷயமாகும். நான் எப்போதும் இதைத்தான் பார்த்துள்ளேன். மிகவும் அமைதியாக அவர்கள் தங்கள் பணியைச் செய்து கொண்டே இருப்பார்கள். நோய்வாய்ப்பட்டிருக்கும்

நிலையில் அவரது பாதங்கள் வீங்கியிருக்கும். ஒரு நாள் நான் அவர்களிடம் இதனால் உங்களுக்கு கஷ்டமாக இல்லையா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நான் பணிகளில் ஈடுபடும்போது அதில் எந்த அளவு மூழ்கி விடுகின்றேன் என்றால் எனக்கு என்ன நடக்கின்றது என்பதைப் பற்றி எனக்கு எந்த உணர்வும் இருப்பதில்லை.

அஞ்சுமனின் கூட்டங்களில் நான் பார்த்துள்ளேன். அவர்கள் மிகவும் குறைவாகத்தான் பேசுவார்கள். ஆனால் அவர்கள் பேசினால் அதில் மிக உறுதியான சிறந்த கருத்துக்களும் ஆலோசனைகளும் இருந்தன.

**முபஸ்ஸிர் ஆயாஸ் சாஹிப் அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்:**

இந்த எளியவனுக்கு, அவர்களது மிக அருகில் இருக்கும் சந்தர்ப்பம் கிடைத்த போது, மேலும் சிறிது காலம் எனக்கு அவரது அஸிஸ்டன்ட் ஆக பணிபுரியும் சந்தர்ப்பமும் கிடைத்தது. அப்போது உண்மையிலேயே நான் அவரை அமைதியாக இருக்கின்ற இயல்பை உடையவராகவும், எளிமையான பண்பை உடையவராகவும், மிகுதியாக உழைப்பதுடன் வேறு பல சிறப்புகளின் எஜமானராக அவர் திகழ்வதை நான் பார்த்தேன். அலுவலகம் வந்ததுமே அவர்கள் பணிகளில் மும்முரமாக ஈடுபடுவார்கள். அலுவலக் கடிதங்களைப் படிப்பதிலிருந்து திருக்குர்ஆன், ரூஹானி கஸாயின் ஆகியவற்றின் புரூஃப் ரீடிங் வரை எல்லா பணிகளையும் தானே செய்வார்கள். இந்த ஜமாஅத்தின் ஊழியருக்கு, எப்போது பணி நேரம் முடிந்தது? மக்கள் எல்லாரும் வீட்டிற்கு போய் விட்டார்களா? என்பதைப் பற்றியெல்லாம் எதுவும் தெரியாது. வேலை செய்து செய்து பாதங்கள் வீங்கிவிடும். ஆனால் அல்லாஹ்வின் இந்த அடியாருக்கு எப்போதும் பணி செய்வதே பணியாக இருந்து வந்தது. சுயநலமில்லாத சுய நோக்கங்கள் இல்லாத அனைத்தையும் அர்ப்பணிக்கும் இயல்புடைய மனிதராக இருந்தார். எனக்கு அவரை மிக அருகில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. வெளி வேஷமும், பகட்டும் அவருக்கு அருகில் கூட வந்ததில்லை. மென்மையும், கண்டும் காணாமல் நடந்து கொள்வதும் மிக அதிகமாக அவர்களிடம் இருந்தது. ஜமாஅத்தின் வரலாற்றின் ஒரு மிகப்பெரும் பகுதியை அவர் ஒன்றுதிரட்டியிருந்தார். அதிகமான பணிகள் இருந்தும் கூட சிரித்த முகத்துடன் அவர் காணப்பட்டார். எளிமையான இயல்புடையவராகவும் தாழ்மைக் குணம், பணிவு ஆகியவற்றின் வடிவமாக அவர் திகழ்ந்தார். நானே நேரடியாக பார்த்துள்ளேன்.

ஜமாஅத்தின் பணத்தை மிகவும் சிந்தித்து மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் பலமுறை சிந்தித்த பிறகே அவர்கள் செலவு செய்வார்கள். ஜமாஅத்தின் பணம் வீணாகி விடக்கூடாது என்பதில் மிகுந்த உணர்வுடையவராக இருந்தார். தனது பணியாளர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுதல், அவர்களது குறைகளை மறைத்தல், சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளுதல் ஆகிய நற்குணங்கள் அவரிடம் மிகவும் அதிகமாக இருந்தது. மிக நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆனால் நோயை தனது பணிகளில் ஒரு தடையாக இருக்க விட்டதில்லை.

**ஒரு முரப்பி சாஹிப் எழுதுகின்றார்:**

அவர்களிடம் தான் என்ற அகந்தை, கர்வம் ஆகியவை சிறிதளவு கூட இருந்ததில்லை. உண்மையிலேயே அவர் சுயநலமில்லாத எளிமையான பண்புகளை உடைய மலக்கு போன்று வாழ்ந்த ஒரு மனிதராவார்.

இன்னொரு முரப்பி சாஹிப் எழுதுகின்றார்கள்:

ரூஹானி கஸாயின் தொடர்பான பணிகள் நடந்து கொண்டிருந்த போது இந்த எளியவனுக்கு ஒரு சம்பவம் வாயிலாக ஷா சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது எந்த அளவு உறுதியான நம்பிக்கை இருந்தது? என்பது தெரிய வந்தது. அந்த சம்பவம் இவ்வாறாக உள்ளது.

ஹென்றி மார்ட்டின் கிளார்க் அவர்கள் தொடுத்த வழக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எல்லா இடத்திலும் நீதிபதியின் பெயரை டக்லஸ் என்றே எழுதியுள்ளார்கள். ஆனால் ரூஹானி கஸாயினின் பாகம் 15 நூல் திரியாகுல் குலூபின் 349வது பக்கத்தில் நீதிபதியின் பெயர் J.R. Drummond என்றும், இடத்தின் பெயர் பேட்டன்கோட் என்றும் அவர்கள் எழுதியிருந்தார்கள். இது தொடர்பாக Research Cell மற்றும்

அஹ்மதிய்யத்தின் வரலாற்றை தொகுப்பவர்கள் ஆகியோருக்கு எழுதப்பட்டு இது என்ன விஷயம்? என்று கேட்கப்பட்டது. இரு தரப்பிலிருந்தும் ஒரே கருத்துதான் கூறப்பட்டது. அதாவது, இதை எழுதியவரின் மறதியால் ஏற்பட்ட தவறாகும் என்று கூறப்பட்டது. ஆனால் ஷா சாஹிப் கருத்து, இவ்வளவு பெரிய மறதி, தவறு ஏற்பட முடியாது என்பதாக இருந்தது. அவர்கள் இதற்காக எந்த அடிக்குறிப்பையும் எழுதவில்லை. அது இருப்பது போன்றே இருக்கும்படி விட்டு விட்டார்கள். ஆனால் ரூஹானி கஸாயின் 18வது பாகத்தின் நுஸூலுல் மஸீஹ் என்ற நூல் தொடர்பான பணி நடந்து கொண்டிருக்கும் போது அதில் 578வது பக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

அப்துல் ஹமீது மீண்டும் ஒன்றரை வருடம் கழிந்த பிறகு பிடிக்கப்பட்டார். அப்போது அவரிடம் அதே விஷயம் மீண்டும் கேட்கப்பட்டது. அப்போது அவர் தனது வாக்குமூலத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தார். அதாவது கிறிஸ்தவர்கள் எனக்கு கற்றுத் தந்ததையே நான் கூறினேன் என்று அவர் கூறினார்.

இரண்டாவது முறையாக அவர் பிடிபட்ட போது அப்போதிருந்த நீதிபதி வேறொருவர் ஆவார். அவரது பெயரைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியிருந்தார்கள். முதல்முறையாக பிடிபட்ட போது இருந்த நீதிபதியின் பெயரை எழுதவில்லை.

பிறகு தொடர்ந்து அவர் எழுதுகின்றார்: ஷா சாஹிப் ஒருபோதும் நிம்மதியிழந்து இருந்ததேயில்லை. எப்போதும் தனது பணியாளர்களுடன் அன்புடன் பரிமாறுபவர்களாக அவர்கள் திகழ்ந்தார்கள்.

**ரப்வாவிலுள்ள கிலாஃபத் லைப்ரரியின் லைப்ரரியன் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

மக்களுக்கு மிகவும் பயன்களை தரக்கூடியவராக அவர்கள் இருந்தார்கள். ஜமாஅத்தின் பணிகளை மிகுதியாக உழைப்புடனும் ஆர்வத்துடனும் செய்வதை நான் பார்த்துள்ளேன். தான் நோய்வாய்ப்பட்டிருந்தும் முழு நேரமும் பணி செய்து வந்தார்கள். எப்போதும் அவர்களது பாதங்கள் வீங்கியிருக்கும். இதய நோயும் இருந்தது.

**அவர் எழுதுகின்றார்:** சில மாதங்களுக்கு முன் ஒரு பணி இலண்டனிலிருந்து ஒப்படைக்கப்பட்டிருந்தது. அது பராஹீனே அஹ்மதிய்யாவின் பதிப்புகளை செக் செய்கின்ற பணியாகும். பராஹீனே அஹ்மதிய்யாவின் பதிப்புகளை சரிபார்க்கும் பணியைச் செய்யும்படி நான் கூறியிருந்தேன். ஷா சாஹிப் லைப்ரரியனுக்கு இதுபற்றிய தகவல் அனுப்பினார்கள். பராஹீனே அஹ்மதிய்யாவின் எத்தனை பதிப்புகள் உள்ளனவோ அவற்றை ஒரு வண்டியில் போட்டு ஒன்றுதிரட்டி விடுங்கள் என்று தகவல் அனுப்பினார்கள்.

**லைப்ரரியன் கூறுகின்றார்:** நான் எல்லா பதிப்புகளையும் ஒன்றுதிரட்டி ஒரு வண்டியில் போட்டேன். பிறகு ஷா சாஹிப் அவர்களிடம் இதை சரி பார்ப்பதற்காக உங்களிடம் கொண்டு வரட்டுமா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் நீங்கள் ஏன் சிரமப்படுகின்றீர்கள்? நானே வந்து விடுகின்றேன் என்று கூறினார்கள். நடப்பது அவர்களுக்கு சிரமமாக இருந்தும்கூட நூலகத்திற்கு வந்து பராஹீனே அஹ்மதிய்யாவின் எல்லா பதிப்புகளையும் அவர் செக் செய்தார்கள். பிறகு பழைய பதிப்புகளின் எதுவும் வீணாகி விடக்கூடாது. எனவே நான் வந்து அவற்றை செக் செய்வது தான் பொருத்தமானது என்று கருதினேன் என்று கூறினார்கள். பிறகு பல மணி நேரம் ஈடுபட்டு அவற்றை செக் செய்தார்கள்.

**நமது அரபி டெஸ்கின் அஹ்மது நயீம் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

கம்ப்யூட்டர் இல்லாத சமயத்தில் தப்ஸீரே கபீரின் விரிவான Index ஐ தயாரிப்பது மிக அதிகமாக உழைக்க வேண்டிய பணியாக இருந்தது. நுட்பமாக அவற்றை பார்க்க வேண்டியது இருந்தது. இதை அவர்கள் தமது மிகுதியான உழைப்பின் மூலமாக தயார் செய்தார்கள். பிறகு அவர்களது பணிவு எந்த அளவு இருந்ததென்றால் தற்போதுள்ள ரூஹானி கஸாயினின் பல தவறுகள் பிரிண்டிங்கில் ஏற்பட்டுள்ளது. மொழியாக்கம் செய்யும் போது எப்போது நாங்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டாலும் எங்கு தவறு ஏற்பட்டிருந்ததோ அதனை மிகுந்த தைரியத்துடன் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். எங்கு விளக்கம் கூற

வேண்டியது இருந்ததோ அங்கு பொருத்தமான விளக்கத்தையும் கூறினார்கள். இப்படிப்பட்ட கேள்விகளுக்கு மிக விரைவாக அவர்களிடமிருந்து பதில் கிடைத்து விடும். மிகுதியாக உழைத்தவாறு இவர்கள் புரூஃப் ரீடிங் பணியைச் செய்தார்கள். அதற்குப் பிறகும் மனிதன் என்ற நிலையில் தவறுகள் இருந்து விடுகின்றன. இதற்காக அவர்கள் மிகவும் வருந்தினார்கள். இவ்வளவு அழகான பிரிண்ட் வெளிவந்திருக்கும் போது அதில் தவறுகள் இருக்கக்கூடாது என்று அவர்கள் கருதினார்கள்.

**ஜமாஅத்தின் முரப்பி ஆன கலீம் அஹ்மது தாஹிர் சாஹிப் கூறுகின்றார்.**

நான் 11 வருடங்களாக அவர் எப்போதும் பணிகளில் தீவிரமாக இருப்பதைப் பார்த்துள்ளேன். மிகவும் அமைதியுடன் தொண்டாற்றக்கூடியவராக அவர் இருந்தார். இந்த வயதிலும் கூட ஒவ்வொரு பணியையும் மிகுந்த உழைப்புடனும் பொறுப்புணர்வுடனும் அவர் செய்து வந்தார். மாஷா அல்லாஹ். இவ்வளவு பணிகளை இவரால் செய்ய முடிவதைப் பார்த்து வியப்பாக இருக்கின்றது. அலுவலக நேரம் முடிந்த பிறகு மாலை நேரங்களில் அரபிக் போர்டின் கூட்டங்களில் கலந்து கொள்வார்கள். அவர்கள் ரூஹானி கஸாயின் தொடர்பாக பணிகள் நடந்த நேரத்தில் ஒவ்வொரு நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லையும் படித்தார்கள்.

சுருக்கமாக மிகச் சிறந்த அறிஞராக அவர்கள் திகழ்ந்தார்கள். மிகவும் அதிகமாக உழைத்த வாழ்க்கையை இதற்காக அர்ப்பணித்தவாறு அவர் இருந்தார். தனது பழைய முபல்லிக்குகளிடம் அவர் இவ்வாறு கூறி வந்தார்.

சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அந்த காலக்கட்டத்தையும் நான் பார்த்திருக்கின்றேன். மிகவும் சாதாரண நிலை இருந்தது. போதுமென்ற மனம் இருக்க வேண்டும் என்பதால் பல வசதிகளும் தேவையற்றதாக கருதப்பட்டதால் அவை இல்லாமல் இருந்து வந்தது. பழைய அலுவலகத்தின் கூரைப் பகுதியைச் சுட்டிக்காட்டியவாறு அவர்கள் கூறினார்கள். இப்போது எல்லா இடங்களிலும் மின்விசிறிகள் இயங்குகின்றன. இங்கு ஒரு பைப் மாட்டப்பட்டிருந்தது. அதற்கு மேல் ஒரு மின் விசிறி இருந்தது. அத்துடன் ஒரு கயிறு கட்டப்பட்டிருந்தது. காற்று தேவைப்பட்ட போது அந்தக் கயிறை நாங்கள் அசைப்போம். அப்போது மின்சாரம் இருக்கவில்லை. அதற்கான வசதிகள் இருக்கவில்லை என்று கூறினார்கள்.

ஷா சாஹிப் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஷா சாஹிப் அவர்களை தனது ஒரு தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக காஷ்மீர் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் ராவல்பிண்டி வந்து சேர்ந்ததும் அங்கு எந்த சவாரியும் இல்லாமல் இருப்பதை அவர்கள் பார்த்தார்கள். சவாரிக்கான ஏற்பாட்டை அவர்கள் செய்வதாக இருந்தால் அதனால் காலதாமதம் ஏற்படும். கலீஃபத்துல் மஸீஹின் கட்டளையை அதன் ஆரம்ப சமயத்திலேயே உடனடியாக நிறைவேற்றுவதற்காக அவர்கள் ராவல்பிண்டியிலிருந்து நடந்து செல்ல ஆரம்பித்தார்கள். திரும்பி வரும் போதும் நடந்தே வந்தார்கள். ஹுஸூர் அவர்களின் தூதுச் செய்தியையும் உரிய இடத்தில் எட்ட வைத்தார்கள்.

அவர்கள் ஒரு பெண் குழந்தையை தத்தெடுத்து வளர்த்து வந்தார்கள். அவரை ஒரு முரப்பிக்கு திருமணம் முடித்துக் கொடுத்தார்கள். தனது குழந்தைகளைப் போன்று எப்போதும் அவரை நலம் விசாரிப்பதுடன் அன்பளிப்புகளையும் அவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். வீட்டிலும் மனைவி மக்களுடன் மிக நல்ல முறையில் பரிமாறி வந்தார். ஒருபோதும் உரத்த குரலில் அவர்கள் பேசியதையோ எங்களை அதட்டியதையோ நாங்கள் கேட்டதேயில்லை என்று அவர்களது மனைவி மக்கள் கூறுகின்றார்கள்.

பிள்ளைகளின் கண்ணியத்தை மிக அதிகமாக கருத்தில் கொள்பவர்களாக இருந்தார்கள். மிகச் சிறந்த முறையில் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்கினார்கள். வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் எளிமை இருந்தது. தன்னைப் பெரிதாக காட்டிக் கொள்வதை அவர்கள் மிகவும் வெறுத்து வந்தார்கள். ஒவ்வொரு செயலிலும் பொறுமையின் உயர்வான முன்மாதிரியாக அவர்கள் திகழ்ந்தார்கள். தனது துன்பத்தை ஒருபோதும் அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியதில்லை. நோய்வாய்ப்பட்டிருந்தாலும் வேறு எந்த கவலை

இருந்தாலும் அதை வெளிப்படுத்திக் காட்டியதில்லை. எந்த அளவு அவர்களிடம் பொறுமை இருந்தது என்றால் காஷ்மீரிலிருந்த அவரது தாயாரின் மரணம் தொடர்பான செய்தி கடிதம் மூலம் அவர்களுக்கு கிடைத்த போது மிகுந்த பொறுமையுடன் அந்த துக்கத்தை அவர்கள் சகித்துக் கொண்டார்கள். பல நாட்களாக அதைப் பற்றி எவரிடமும் அவர்கள் கூறாமல் இருந்தார்கள். விருந்தோம்பல் என்ற பண்பு மிகுதியாக அவர்களிடம் இருந்தது.

காஷ்மீரிலிருந்து ஆண்டு மாநாட்டிற்காக விருந்தினர்கள் வரும்போது முழு வீட்டையும் விருந்தினர்களுக்காக கொடுத்து விட்டு அவர்கள் தமது பிள்ளைகளுடன் ஒரு கடையில் சென்று தங்கி வந்தார்கள்.

வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்ற தனது உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு எல்லா சமயங்களிலும் அவர்கள் முயற்சி செய்து வந்தார்கள். கடைசி நேரம் வரை இது தொடர்பான கவலை அவர்களுக்கு இருந்தது. இறுதியாக சில வருடங்கள் பலமுறை தங்களது பிள்ளைகளைச் சந்திப்பதற்காக வெளிநாடு சென்று வந்தார்கள். ஏறக்குயை இவர்களது எல்லா மகன்களும் வெளிநாட்டில்தான் இருக்கின்றார்கள். இவரது மூத்த மகன் அஹ்மது அயாஸ் சாஹிப் அவர்கள் Humanity First –ன் சேர்மன் ஆக இருக்கின்றார்கள். பிள்ளைகளிடம் அவர் வந்த சமயத்தில் பிள்ளைகள் பிடிவாதமாக நீங்கள் இங்கேயே தங்கி விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் நான் முழு வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளேன். கொஞ்ச காலத்தை மட்டும் அர்ப்பணிக்கவில்லை. அவர்களது பாதங்களில் மிகுந்த வேதனை இருந்து வந்தது. எல்லா சமயத்திலும் அது விலகியிருந்தது. இவ்வாறிருந்தும் அவர்கள் முறையாக அலுவலகத்திற்கு செல்வதுடன் தனது பணியில் எந்த இடையூறும் வராமல் பார்த்துக் கொள்வார்கள்.

இறுதியாக நோய்வாய்ப்பட்ட சமயத்தில் அவர்கள் ஐந்து முறை மருத்துவமனைக்கு சென்று வந்தார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் டாக்டர்களிடம் நான் எப்போதும் அலுவலகம் செல்ல முடியும்? என்ற கேள்வியையே கேட்டு வந்தார்கள். வஃபாத் ஆவதற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்பும் அலுவலகத்திற்கு சென்று வந்தார்கள். அங்கு அமர்ந்து பணி செய்து கொண்டிருக்கும்போதே மிகுந்த கஷ்டத்திற்கு அவர்கள் ஆளானார்கள். பிறகு அங்கிருந்து நேரடியாக பரிசோதனைக்காக 12 மணிக்கு மருத்துவமனை சென்றார்கள். டாக்டர்கள் அவரை மருத்துவமனையில் இருக்கும்படி கூறினர். அங்கும் படுத்தபடியே அலுவலக பணிகளை அவர்கள் செய்தார்கள். சரி பார்க்கும் பணிகளில் ஈடுபட்டார்கள். பணியாளர்கள் தாள்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அவர்கள் அதை சரிபார்க்கும் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். இறுதி நாளன்று துஆ செய்யுங்கள். அல்லாஹ் உங்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக என்று கூறினார்கள். அவர்களது மரண நேரம் அருகில் வந்து விட்டது என்பது அவர்களுக்கு தெரிய வந்து விட்டது. எனது பிளைட்டிற்கான நேரம் வந்து விட்டது என்று கூறினார்கள்.

இங்கிருந்து எப்போது ஃபேக்ஸ் அனுப்பினாலும் அதற்கு தனது கைகளால் பதில் எழுதி அனுப்புவார்கள். இப்போது இறுதியாக அவர்களிடமிருந்து வந்த கடிதம் கூட அவர்களது கையால் எழுதப்பட்டதாகும். எந்த கிளர்க் மூலமாகவும் அதை எழுதவில்லை. அதை கம்போஸ் செய்வதுமில்லை. மெதுவாக மிக அழகாக எழுதுவார்கள். ஆனால் பலவீனத்தின் காரணத்தால் அவர்களது கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. அவ்வாறிருந்தும்கூட இதற்காக நேரத்தை செலவழித்து அவர்கள் எழுதி வந்தார்கள்.

டிசம்பர் 14ம் தேதி 11.30 மணிக்கு அலுவலகத்தில் இருந்தார்கள். அலுவலகத்தில் வைத்து வஃபாத் ஆக வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாக இருந்தது.

மருத்துவமனையில் இருக்கும் போது ரூஹானி கஸாயினிலுள்ள எல்லா தவறுகளையும் சரிபார்த்து அந்தப் பணியை நிறைவு செய்ய வேண்டும் என்பது எனது விருப்பம் என்று கூறி வந்தார்கள். ஆனால் அதை செய்வதற்கான கால அவகாசம் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

நஸாரத் இஷாஅத்திலிருந்த ஒரு முரப்பி சாஹிப் எழுதுகின்றார்கள். ஷா சாஹிப் அவர்களின் சகளை அவரிடம் இவ்வாறு கூறினார்கள். டிசம்பர் 17 ம் தேதி ஷா சாஹிப் ஒரு கனவு பார்த்தார்கள். அதில் அவர்களது மனைவி அவர்களிடம் வந்து நீங்கள் இன்னும் டிக்கெட் எடுக்கவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஷா

சாஹிப் இதுவரை நான் டிக்கெட் எடுக்கவில்லை என்று கூறினார்கள். சிறிது நேரம் கழிந்த பிறகு மீண்டும் ஷா சாஹிப் தனது மனைவியிடம் நான் டிக்கெட் எடுத்து விட்டேன். Boarding Pass ம் கிடைத்து விட்டது என்று கூறினார்கள். எந்த நாளில் ஷா சாஹிப் வஃபாத் ஆனார்களோ அன்று காலை 10.00 மணியளவில் ஷா சாஹிபின் நண்பர் ஒருவர் மருத்துவமனையில் அவரை பார்ப்பதற்காக வந்திருந்தார். அங்கு சென்ற பிறகு தான் அவருக்கு மருத்துவர்கள் நாங்கள் செய்ய வேண்டிய முயற்சிகளைச் செய்து விட்டோம் என்று கூறியது தெரிய வந்தது. இதற்குப் பிறகு ஷா சாஹிப் தனது மகன் இம்ரான் அவர்களை அழைத்தார்கள். மெதுவாக அவரிடம் ஃபிளைட் வந்து விட்டது என்று கூறினார்கள். மகனுக்கு அவர்கள் கூறியது புரியவில்லை. விஷயத்தைக் கேட்பதற்காக ஷா சாஹிபின் அருகில் அவர் சென்றார். ஆனால் அதற்குப் பிறகு அவர்களால் பேச முடியவில்லை.

ஜமாஅத்தின் இந்த ஊழியர் தனது இறுதி மூச்சு வரை ஜமாஅத்திற்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். தனது சக்திக்கேற்ப ஜமாஅத் பணிகளுக்கு மற்ற எல்லாவற்றையும் விட அவர் முன்னுரிமை வழங்கினார். ஷா சாஹிப் மார்க்க அறிவை பெற்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களைப் படித்தார்கள். அதற்கேற்ப செயல்படவும் செய்தார்கள். வெறும் அறிவை மட்டும் அவர்கள் பெறவில்லை. அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்த எப்போதும் முயற்சி செய்து வந்தார்.

நான் நாஸிர் அஃலா வாக இருந்த சமயத்தில் அவர்கள் நாஸிர் இஷாஅத் ஆக இருந்தார்கள். அந்த சமயத்தில் கூட அவர்கள் முழுமையாக கட்டுப்பட்டு நடக்கக் கூடியவராக இருந்ததை நான் பார்த்தேன். கிலாஃபத்தின் ஆடையை அல்லாஹ் எனக்கு அறிவித்த போது ஷா சாஹிப் தனது மனத்தூய்மையிலும் பற்றிலும் முன்பை விட மிகவும் அதிகமாக முன்னேறியிருந்ததை என்னால் பார்க்க முடிந்தது. நிச்சயமாக அப்படிப்பட்ட உறவு கிலாஃபத்துடன் இருக்க வேண்டும்.

பைஅத்தின் ஆன்மாவைப் புரிந்தவாறு தனது எல்லா ஆற்றல்கள் மூலமாகவும் அதற்குரிய உரிமையை செலுத்தக்கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள். அல்லாஹ் அவர்களது தகுதியை உயர்த்தவானாக. காலத்தின் கலீஃபாவிற்கும் ஜமாஅத்திற்கும் எப்போதும் அத்தகைய உயிரை அர்ப்பணிக்கக்கூடிய உதவியாளர்களை அல்லாஹ் வழங்கிக் கொண்டே செல்வானாக. இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களுக்காக நான் ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ். இத்துடன் இன்னும் சில ஜனாஸாக்கள் உள்ளன.

முதலாவது ஜனாஸா இம்மதியாஸ் பேகம் சாஹிபா உடையதாகும். இவர் மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மத் முனவ்வர் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இவர்கள் கிழக்கு ஆப்பிரிக்காவில் முபல்லிக் ஆக இருந்தவர் ஆவார். டிசம்பர் 15 ம் தேதி இவர் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். 1936 –ல் இவர்கள் பிறந்தார்களா. 1952 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் தேதி இவரது திருமணம் மவ்லானா முஹம்மது முனவ்வர் சாஹிபுடன் நடந்தது. அவர்கள் மவ்லவி சாஹிபின் இரண்டாவது மனைவி ஆவார். திருமணம் நடந்த சமயத்திலிருந்து மவ்லவி முஹம்மது முனவ்வர் சாஹிப் பணி ஓய்வு ஆகும் வரை அதாவது செயல் களத்திலிருந்து அவர்கள் திரும்பும் வரையுள்ள காலத்தில் 3 அல்லது 4 வருடங்களைத் தவிர ஏனைய நாட்களில் மர்ஹூமாவிற்கு, வாழ்க்கையை அர்ப்பணித்த தனது கணவருடன் கீன்யா, தன்ஸானியா, பாலஸ்தீன், நைஜீரியா ஆகிய இடங்களில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. மவ்லவி முஹம்மது முனவ்வர் சாஹிப் தனது **நேக் பீவி கீ யாது மே** என்ற நூலில் தனது இரு மனைவிமார்களும் பஸ்பரம் ஒருவர் மற்றவருடன் பரிமாறிய விதத்தை மிகவும் பாராட்டி எழுதியுள்ளார்கள். இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

மவ்லானா முஹம்மது முனவ்வர் சாஹிபின் முதல் மனைவியை இப்போது வஃபாத் ஆன இவர்களது இரண்டாவது மனைவி எப்போதும் சகோதரி என்றே கூறி வந்தார்கள். ஒருபோதும் அவர்களுக்காக சக்களத்தி என்ற சொல்லை பயன்படுத்தியதில்லை. அவ்வாறே அவர்களிடம் எதிர்மறையான பரிமாற்றத்தை ஒருபோதும் மேற்கொள்ளவில்லை. இரண்டு மனைவிமார்களும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் மிக நல்ல முறையில்

நடந்து கொண்டனர். ஒருவர் மற்றவரது பிள்ளைகளை எந்த அளவு கவனித்துக் கொண்டனர் என்றால் மக்கள் அவர்களது குழந்தைகளிடம் இந்த இருவரில் உங்களைப் பெற்றெடுத்த தாய் யார்? எனக் கேட்க ஆரம்பித்தனர். மற்றவர்களது பொருளாதார தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல சமயங்களில் தனது பென்ஸன் தொகையிலிருந்தும் செலவு செய்தவாறும் சில நேரம் கடன் வாங்கியும் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். அவர்களது மகனான முபாரக் அஹ்மது தாஹிர் சாஹிப் அவர்கள் ரப்வாவில் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் செயலராக இருந்து வருகின்றார். மார்க்கத்திற்குத் தொண்டாற்றுகின்ற ஆர்வமுடைய மிகவும் தைரியமிக்க வீரப் பெண்மணியாக அவர்கள் இருந்தார்கள். அஹ்மதிகள், அஹ்மதி அல்லாதவர்கள் ஆகிய இரு சாராருக்கும் ஒன்றுபோல் உதவி செய்து வந்தார்கள். முபாரக் அஹ்மது தாஹிர் சாஹிப் அவர்களின் தாயார் முதல் மனைவியாவார்கள்.

இப்போது வஃபாத் ஆன இந்த தாயாரின் மூலமாக இவரது சகோதரி ஒருவர் உள்ளார். மவ்லவி முஹம்மது முனவ்வர் சாஹிப் அவர்களின் மகள் அமத்துன் நூர் தாஹிரா சாஹிபா உள்ளார். இவர் ஜமாஅத்தின் முபல்லிக்கான அப்துர் ரஸ்ஸாக் பட் சாஹிபின் மனைவி ஆவார்கள். அல்லாஹ் மர்ஹூமாவின் தகுதியை உயர்த்துவானாக. இவர்களது நன்மைகளை இவர்களது சந்ததிகளிலும் தொடரச் செய்வானாக.

அடுத்த ஜனாஸா சகோதரி ஜைனபா வஸீம் சாஹிபா உடையதாகும். இவர் U.S.A வைச் சேர்ந்த கமாலுதீன் காலு சாஹிபின் மகளாவார்கள். தமது 83வது வயதில் டிசம்பர் 6 ஆம் தேதி இவர் வஃபாத் ஆகிவிட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் பின்லாந்து லஜ்னாவின் தலைவியாக இருந்தார்கள். இதைத் தவிர பல்வேறு பொறுப்புகளை வகித்து தொண்டாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. மிக நல்ல பெண்ணாகவும் ஜமாஅத்திற்காக வேதனைப்படுகின்ற தூய உள்ளம் கொண்ட பெண்ணாகவும் இவர் இருந்தார். உள்ளூர் அமெரிக்கராக இவர் இருந்தார். இவருக்கு கணவரும், இரண்டு மகள்களும் உள்ளனர்.

அடுத்த ஜனாஸா அமத்துர் ரஹ்மான் சாஹிபா கல்கேரி உடையதாகும். இவர் தமது 61வது வயதில் கேன்ஸர் காரணமாக வஃபாத் ஆகியுள்ளார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். மிகவும் நல்ல பெண்ணாகவும் தொழுகைகளை பேணக்கூடியவராகவும் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இறையச்சம் உள்ளவராகவும் இவர் இருந்தார். உம்ரா செய்வதற்கான நற்பாக்கியம் இவருக்கு கிடைத்தது. திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களுடன் இவருக்கு அளவுகடந்த பற்று இருந்து வந்தது. மர்ஹூமா வஸிய்யத் செய்தவர் ஆவார்.

ஸெய்யதா வஸீமா பேகம் சாஹிபா அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இவர்கள் ஹஸ்ரத் ஸெய்யது வலியுல்லாஹ் ஷா சாஹிப் அவர்களின் மகளாவார்கள். இவர் அமெரிக்காவில் உள்ளவர். ஹஸ்ரத் ஸெய்யது வலியுல்லாஹ் ஷா சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மூத்த மாமா ஆவார்கள். வஃபாத் ஆனவர் இவர்களது மூத்த மகளாவார்கள். தமது 83 வயதில் இவர்கள் வஃபாத் ஆகியுள்ளார்கள். மாஷா அல்லாஹ். பல சிறப்புகளுக்கு எஜமானியாக இவர் இருந்தார். ஒவ்வொரு ஜுமுஆ தொழுகைக்குப் பிறகும் இவர்களது தொலைபேசி அழைப்பு எனக்கு வந்து கொண்டிருந்தது. என்னிடம் துஆவுக்காக வேண்டுவார்கள். தமது பிள்ளைகள் சரியான பாதையில் நிலைநிற்பதற்காவும் துஆ செய்யும்படி வேண்டுவார்கள். இவரது மகனான நதீம் காஸி சாஹிப் ஜமாஅத்தின் தலைவர் ஆவார். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவர்களது நன்மைகளை இவர்களது சந்ததிகளில் நிலைபெறச் செய்வானாக.

அடுத்த ஜனாஸா மியான் அப்துல் கய்யூம் சாஹிப் உடையதாகும். இவர் கொயட்டாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய வஸீர் முஹம்மது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகனாவார்கள். டிசம்பர் 6 ஆம் தேதி தமது 88வது வயதில் இவர்கள் வஃபாத் ஆனார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இவருக்கு அளவு கடந்த அன்பு இருந்தது. கிலாஃபத்துடன் இவருக்கு ஆழ்ந்த பற்றும் உறவும் இருந்து வந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவர்களது நிக்காஹ்வை நடத்தி வைத்தார்கள். மேலும் அவர்களது வகீலாகவும் இருந்தார்கள்.

அடுத்த ஜனாஸா முஹம்மது முஸ்தஃபா ஹல்கா வரங்கி டவுண் கராச்சி உடையதாகும். செப்டம்பர் 27 ஆம் தேதி இவர் வஃபாத் ஆனார். 1971 ஆம் ஆண்டு இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். குடும்பத்தில் இவர் மட்டும் அஹ்மதியாக இருந்தார். அஹ்மதிய்யத்தை தழுவியதன் காரணமாக இவருக்கு பல்வேறு துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியது வந்தது. கிராமவாசிகள் முன்னிலையில் பஹாயீகள் இவரைக் கட்டி வைத்து இவருக்கு கொடுமையிழைத்தார்கள். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் அவர் அஹ்மதிய்யத்தை கடுமையாக எதிர்த்தவர்களில் ஒருவராக இருந்து வந்தார். ஆனால், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவரிடத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஜமாஅத்துடன் எப்போதும் அவர் மனத்தூய்மையுடனும் ஆழ்ந்த பற்றுடனும் நல்லுறவு வைத்திருந்தார். அவர் தமது பகுதியில் தஃலீமுல் குர்ஆன் செயலராகவும், அத்ஃபால் முரப்பியாகவும், தஃவத்தே இலல்லாஹ் செயலராகவும் உள்ளூர் முஅல்லிமாகவும் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. எண்ணற்ற அத்ஃபால்களுக்கும், அன்ஸார்களுக்கும், லஜ்னாக்களுக்கும், நாஸிராத்துகளுக்கும் திருக்குர்ஆனைப் பார்த்து ஓதவும் கற்றுக் கொடுத்து அதன் பொருளையும் இவர் கற்றுக் கொடுத்துள்ளார். திருக்குர்ஆனின் பெரும் பகுதி இவருக்கு மனனமாகத் தெரியும். மனைவியைத் தவிர ஒரு மகனும் உள்ளார். அவர் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்.

செக்வாலைச் சேர்ந்த நஸீர் அஹ்மது ஜுலை மாதம் 21ம் தேதி வஃபாத் ஆனார்கள. இவருக்காக ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைக்கும்படி கேட்டுள்ளார்கள். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியான மலிக் கரீம்தீன் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 1930 ஆம் ஆண்டு இவரது தந்தையார் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு தொண்டு புரிவதற்காக காதியான் சென்றார். 17 வருடங்கள் அங்கு தங்கி தொண்டாற்றி வந்தார். மர்ஹூம் வஸிய்யத் செய்தவர். மனத்தூய்மையில் முன்னேறியவர் ஆவார். கிலாஃபத் மீது அளவு கடந்த பற்றுள்ளவராக இவர் திகழ்ந்தார்.

ஃபதஹ் முஹம்மத் கான் சாஹிப் நவம்பர் மாதம் 28 ஆம் தேதி இவர் வஃபாத் ஆனார். மிக நல்ல மனிதராகவும் தூய இயல்பைக் கொண்டவராகவும் இருந்தார். இவருக்கு 5 மகள்களும் 3 மகள்களும் உள்ளனர். இவரது மகனான மதிப்பிற்குரிய ஹாபிஸ் ஃபுர்கான் முஹம்மது சாஹிப் வாழ்க்கையை அர்ப்பணித்தவராவார். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இவர் ஆசிரியராக இருந்து வருகிறார். இவரது மருமகன் அப்துர் ரஸீத் சாஹிப் மர்ஹூம் ஜமாஅத்தின் முரப்பியாக இருந்தார். அல்லாஹ் எல்லா மர்ஹூம்களின் தகுதிகளையும் உயர்த்துவானாக. இவரது குடும்பத்தினருக்கு பொறுமை, தைரியம், மற்றும் மன உறுதியை வழங்குவானாக. நன்மைகளில் இவர்களை நிலைத்திருக்க செய்வானாக. மனத்தூய்மையுடனும் ஆழ்ந்த பற்றுடனும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவரது ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 23.12.2011**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456